جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மூன்று விஷயங்கள்

தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# மூன்று விஷயங்கள் 1

## அல்லாஹ் ஏவும் மூன்று விஷயங்கள்:

1- நீதி செலுத்துமாறு

2- நன்மை செய்யுமாறு

3- உறவினர்களுக்கு கொடுக்குமாறு

## அல்லாஹ் தடுக்கும் மூன்று விஷயங்கள்:

1- மானக்கேடான காரியங்களை விட்டும்

2- பாவங்களை விட்டும்

3- அக்கிரமங்களை விட்டும்

படியுங்கள் : அல்குர்ஆன் 16:90

# மூன்று விஷயங்கள் 2

## அல்லாஹ் நபி(ﷺ) அவர்களுக்கு இட்ட மூன்று கட்டளைகள்:

1- மன்னிப்பைக் கைக்கொள்வீராக!

2- நன்மையைக் கடைபிடிக்குமாறு (மக்களை) ஏவுவீராக!

3- அறிவீனர்களைப் புறக்கணித்து விடுவீராக !

படியுங்கள் : அல்குர்ஆன் 7:199

# மூன்று விஷயங்கள் 3

## அவர்கள் பேசும் இரகசியங்களில் நன்மை பயக்கும் மூன்று:

1- தர்மத்தை ஏவுதல்

2- நன்மையை ஏவுதல்

3- மனிதர்களிடையே சமாதானம் செய்து வைத்தல்

படிப்பினைகள் : அல்குர்ஆன் 4:114

# மூன்று விஷயங்கள் 4

## நஷ்டம் போகாத மூன்று வியாபாரங்கள்:

1- அல்லாஹ்வின் வேதத்தை ஓதுவது

2 - தொழுகையை முறையாகக் கடைப்பிடித்துத் தொழுவது

3- அல்லாஹ் அளித்திருப்பதிலிருந்து இரகசியமாகவும், வெளிப்படையாகவும் (அல்லாஹ்வின் பாதையில்) செலவு செய்வது

படியுங்கள் : அல்குர்ஆன் 35:29

# மூன்று விஷயங்கள் 5

## சுவர்க்கத்தின் வழி இலேசாக்கப்படும் மூன்று விஷயங்கள்

1- (தானதர்மங்கள்) கொடுப்பது

2- (இறைவனிடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வது,

3- நல்லவற்றை (அவை நல்லவையென்று) உண்மை படுத்துவது

## கஷ்டத்திற்குள்ள (நரகத்தின்) வழி இலேசாக்கப்படும் 3 விஷயங்கள்

1- உலோபித்தனம் செய்வது

2- அல்லாஹ்விடமிருந்து தன்னைத் தேவையற்றவனாகக் கருதுவது

3- நல்லவற்றை பொய்யாக்குவது

படியுங்கள் : அல்குர்ஆன் 92:05-10

# மூன்று விஷயங்கள் 6

## தீமையை நன்மையாக மாற்றும் மூன்று விஷயங்கள்:

1- தவ்பாச் செய்வது

2- ஈமான் கொள்வது

3- நற்செயல்களைச் செய்வது

படியுங்கள் : அல்குர்ஆன் 25:70

# மூன்று விஷயங்கள் 7

## அல்லாஹ் ஸஹாபாக்களுக்கு (முஃமின்களுக்கு) வெறுப்பாக ஆக்கிய மூன்று விஷயங்கள்:

1- நிராகரிப்பை

2- பாவத்தை

3- மாறுபாடு செய்வதை

படியுங்கள் : அல்குர்ஆன் 49:07

# மூன்று விஷயங்கள் 8

## நாளை மறுமையில் விசாரணைக்கு உற்படுத்தப்படும் மூன்று:

1- செவிப்புலன்

2- பார்வை

3- இருதயம்

படியுங்கள் : அல்குர்ஆன் 17:36

# மூன்று விஷயங்கள் 9

## சாபத்துக்குரிய மூவர்:

1- அல்லாஹ்விடம் அளித்த வாக்குறுதியை உறுதிப்படுத்திய பின்னர் முறித்து விடுபவர்கள்.

2- அல்லாஹ் சேர்த்து வைக்க வேண்டுமென ஏவியதைப் பிரித்து டுபவர்கள்.

3- பூமியில் ஃபஸாது (விஷமம்) செய்பவர்கள்.

படியுங்கள் : அல்குர்ஆன் 13:25

# மூன்று விஷயங்கள் 10

## அவதூறு சொன்னவர்களுக்கு எதிராக மறுமையில் சாட்சி சொல்லும் மூன்று:

1- அவர்களுடைய நாவுகள்

2- அவர்களுடைய கைகள்

3- அவர்களுடைய கால்கள்

படியுங்கள் : அல்குர்ஆன் 24: 24